
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 101 | 4 Pages | 9.11.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 101 | 4 பக்கங்கள் | 9.11.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்**

**விளக்கம்:**
**ஒருவன் கறுவுகொண்டு துன்பம் செய்த போதிலும் அவனுக்கு திரும்ப துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும்.**

# மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு ஐ.நா.விருது: முதல்வரிடம் வாழ்த்து பெற்ற அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை, நவ.9

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024ம் ஆண்டிற்கான (United Nation Interagency Task Force Award) விருது மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சார்பில் உணவு பாதுகாப்பு துறையில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட விருது, ஆகிய இரண்டு விருதுகளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

ஐ.நா.விருது:

கடந்த 25 செப்டம்பர் 2024 அன்று நியூயார்க்கில் நடந்த 79வது ஐ.நா. பொது சபையின் லெவன்த் பிரண்ட்ஸ் ஆப் தி டாஸ்க் போர்ஸ் கூட்டத்தில் 2024க்கான டாஸ்க் போர்ஸ் விருதுகள் (Task Force Awards 2024) அறிவிக்கப்பட்டது. புதுமை மற்றும் தொழில் நுட்பத்தை மேம்படுத்தல் உட்பட தொற்றாநோய்கள் மற்றும் மனநலம் தொடர்பான சிறந்த பணிகளை அங்கீகரிக்கின்றன. உலக சுகாதார அமைப்பின் கொள்கை மற்றும் தர நிலையுடன் இணைந்து திறனுதவித் தொழில் நுட்பவியல் பணியின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்க இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதில் சுகாதார அமைச்சகங்கள் அல்லது சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசு நிறுவனம் என்ற பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மை திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு விருது அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது. மக்களைத் தேடி மருத்துவம் தமிழ்நாட்டை உலகத்திற்கே முன்மாதிரியான மாநிலமாக விளங்கச் செய்கிறது.

மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் தமிழ்நாட்டிற்கு இந்திய அளவில் இரண்டாவது இடத்திற்கான விருது:

கடந்த 20.09.2024 அன்று "Global Food Regulators Summit2024", பாரத் மண்டபம், புதுடில்லியில் நடைபெற்ற விழாவில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் உணவு பாதுகாப்பு துறையில் மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவு பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்து, 202324ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

இந்திய அளவில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் கடந்த மூன்று வருடங்களாக தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையானது, தொடர்ந்து முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தோல்வி அடைவார்: எலான் மஸ்க் கணிப்பு



வாஷிங்டன், நவ.9

கனடாவை சேர்ந்த காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக அந்த நாட்டு அரசு குற்றம்சாட்டி வருகிறது. இந்தவிவகாரம் தொடர்பாக இரு நாடுகளும் கடந்த மாதம் பரஸ்பரம் தூதரக அதிகாரிகளை வெளியேற்றின.

காலிஸ்தான் பயங்கரவாதி எதிராக வன்முறையை தூண்ட இந்திய உள்துறை மந்திரி அமித்ஷா திட்டமிட்டுள்ளார் என்று கனடா மந்திரி டேவிட் மோரிசன் சில நாட்களுக்கு முன்பு பகிரங்கமாக குற்றம்சாட்டினார். இதற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. இப்படி தொடர்ச்சியாக இந்தியா கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்தியாவுடன் மோதல் போக்கை கடைபிடித்து வருவதால் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு உள்நாட்டிலும் உலக நாடுகள் மத்தியிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், உலக பெரும் பணக்காரர் எலான் மஸ்க், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளார். ஜஸ்டின் ட்ரூடோ இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் கூறுகையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வரவிருக்கும் தேர்தலில் காணாமல் போய்விடுவார்" எனக் கூறியுள்ளார். கனடாவில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், எலான் மஸ்க் இவ்வாறு கூறியிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## உக்ரைனில் இணையதள வசதி கிடைத்து ஆபாச படம் பார்க்கும் வடகொரிய வீரர்கள்

கீவ், நவ.9

உக்ரைன் நாட்டின் மீது ரஷியா 2022ம் ஆண்டு பிப்ரவரியில் படையெடுத்தது. இந்நிலையில், போர் தொடுத்து 2 ஆண்டுகள் ஆகியும் இருதரப்பிலும் அமைதி பேச்சுவார்த்தையில் பலன் ஏற்படவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியும் தோல்வியிலேயே முடிந்தது.

உக்ரைனுக்கு எதிரான போரில் 10 ஆயிரம் வடகொரிய வீரர்களை அனுப்ப ரஷியா திட்டமிட்டு உள்ளது என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டாக கூறினார். இந்நிலையில், ஏ.கே.12 ரக துப்பாக்கிகள், பீரங்கி குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்களை ஏந்திய வடகொரிய வீரர்கள், உக்ரைனை ஒட்டிய எல்லை பகுதியில் குவிக்கப்பட்டு உள்ளனர்.

ரஷிய போரில் அந்நாட்டுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், ரஷியாவின் கிழக்கே வெவ்வேறு 5 தலங்களில் அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை உக்ரைனின் பாதுகாப்பு உளவு பிரிவு தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், வடகொரிய வீரர்களுக்கு தடையற்ற இணையதள வசதி கிடைத்துள்ளது. இது அவர்களுக்கு ஆச்சரியமளிக்கும் விசயம். போருக்காக வந்த இடத்தில், இதனை பயன்படுத்தி கொண்ட வீரர்கள், இணையதளம் வழியே ஆபாச படங்களை பார்த்து வருகின்றனர் என தி பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கின்றது.

எனினும், உக்ரைனுக்கு கிம் ஜாங் அன் அனுப்பி வைத்த வடகொரிய வீரர்களிடையே இந்த இணையதள பயன்பாடு கிடைத்தது பற்றிய விவரங்கள் எப்படி வெளிவந்தன என்ற தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. ரஷியாவின் குர்ஸ்க் பகுதியில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துள்ள வடகொரிய வீரர்கள் முதன்முறையாக கடந்த புதன்கிழமை உக்ரைன் படையுடன் மோதலில் ஈடுபட்டனர்.

## மெக்சிகோ: படுகொலையான 2 குழந்தைகள் உள்பட 11 பேரின் உடல்கள் மீட்பு

சில்பான்சிங்கோ, நவ.9

மெக்சிகோ நாட்டின் தெற்கே மெக்சிகோ நகரில் லாரி ஒன்றில் 2 குழந்தைகள் உள்பட 11 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அகாபுல்கோ நகருக்கு செல்லும் நெடுஞ்சாலையில் நின்றிருந்த லாரியில் இந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகிறோம் என போலீசார் நேற்று தெரிவித்தனர். சில்பான்சிங்கோ நகரில் பதவியேற்ற ஒரு வாரத்திற்குள் மேயர் தலை வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.



இந்த சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்குள் இந்த படுகொலை சம்பவம் நடந்துள்ளது. இந்நகரம், குர்ரீரோ என்ற தெற்கு மாகாணத்தின் தலைநகர் ஆகும். இந்நகரில் போதை பொருள் கும்பல்களுக்கு இடையே அடிக்கடி மோதல்கள் நடந்து, பலர் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

இதே பகுதியில் 5 சிறுவர்கள் உள்பட 17 பேர் கடந்த வாரம் காணாமல் போனார்கள். எனினும், இந்த 2 சம்பவங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையா? என்பது உடனடியாக தெரிய வரவில்லை என போலீசார் தெரிவித்தனர். முன்னாளில் இது பணக்காரர்கள் விளையாட கூடிய பீச் பகுதியாக இருந்தது. ஆனால், குற்ற வன்முறை சம்பவம் நடக்கும் பகுதியாக பின்னர் மாறி விட்டது. இதே அகாபுல்கோ புறநகரில், ஒரே குடும்பத்தின் 5 உறுப்பினர்களை துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் சுட்டு படுகொலை செய்த சில நாட்களில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

மெக்சிகோவில் 2006ம் ஆண்டில் இருந்து இதுவரை 4.5 லட்சத்திற்கும் மேற்பட்டோர், போதை பொருள் கடத்தல் மற்றும் அது தொடர்புடைய கும்பல்களால் ஏற்பட்ட வன்முறையால் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

## முருகன் திருக்கல்யாண வைபவத்தில் வைக்கப்பட்ட தேங்காய் ரூ.3 லட்சத்திற்கு ஏலம்

தேனி, நவ.9

முருகன் கோவில்களில் நடைபெறும் விழாக்களில், கந்தசஷ்டி விழா சிறப்பு வாய்ந்தது ஆகும். அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து முருகன் கோவில்களிலும் கடந்த 2ந்தேதி கந்தசஷ்டி விழா தொடங்கியது. கந்த சஷ்டி விழாவின் சிகர நிகழ்ச்சியாக கருதப்படும் சூரசம்ஹாரம் நிகழ்ச்சி நேற்று கோலாகலமாக நடந்தது.

தேனி மாவட்டத்தில் உள்ள முருகன் கோவில்களிலும் திரளான பக்தர்கள் முன்னிலையில் சூரசம்ஹாரம் அரோகரா கோஷம் முழங்க நடைபெற்றது. சூரசம்ஹாரத்தை தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய முருகனை பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இந்த நிலையில், போடி அருகே 350 ஆண்டுகள் பழமை வாய்ந்த பால சுப்பிரமணியன் கோவிலில் திருக்கல்யாணம் இன்று விமர்சையாக நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருக்கல்யாண வைபவத்தில் வைக்கப்பட்ட தேங்காய் ஏலம் விடப்பட்டது. அந்த தேங்காயை போடி ரங்கநாதபுரத்தைச் சேர்ந்த முருக பக்தர் ஒருவர் ரூ.3 லட்சத்திற்கு ஏலத்தில் எடுத்து வாங்கி சென்றார். ஏலத்தொகைய அறிந்து மெய் சிலிர்த்த பக்தர்கள் அரோகரா கோஷம் எழுப்பினர். 6 ஆயிரத்தில் தொடங்கிய ஏலத்தொகை ரூ.3 லட்சத்தில் நிறைவு பெற்றது.



ஒவ்வொரு வருடமும் திருக்கல்யாண வைபவம் நிறைவு பெற்றதும் திருமாங்கல்யம் வைக்கப்பட்ட ஒற்றை தேங்காய் ஏலம் விடப்படுகிறது. கடந்த ஆண்டு ரூ.65 ஆயிரத்திற்கு ஏலம் எடுக்கப்பட்ட தேங்காய் இந்த ஆண்டு ரூ.3 லட்சம் வரை சென்றுள்ளது.

## பருவமழை காலத்தில் சீரான மின் விநியோகம் வழங்க அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவுறுத்தல்

சென்னை, நவ.9

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி இன்று (08.11.2024) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில் பருவமழைக்காலம் மற்றும் எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு முழுவதும் 6,68,225 ஒருங்கிணைந்த சிறப்பு பராமரிப்பு பணிகள் திட்டமிடப்பட்டு, கடந்த 01.07.2024 முதல் 15.10.2024 வரை மொத்தமாக 13,73,051 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதிலும், குறிப்பாக, 47,380 மின்கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, சாய்ந்த நிலையில் இருந்த 33,494 மின் கம்பங்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன, புதியதாக 27,329 மின் கம்பங்கள் இடைசெருகல் செய்யப்பட்டிருக்கின்றன.

2,17,775 இடங்களில் பலவீனமான இன்சுலேட்டர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, 41,508 இடங்களில் மின்கம்ப தாங்கு கம்பிகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன, பழுதடைந்த 7,118 இடங்களில் பில்லர் பாக்ஸ்கள் சரிசெய்யப்பட்டுள்ளன, இதுதவிர்த்து சுமார் 2,927 கி.மீ. பழைய மின்கம்பிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 13,73,051 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மின் பகிர்மான வட்டம் வாரியாக விரிவான ஆய்வினை மேற்கொண்ட அமைச்சர், வட்ட அளவில் அதிக அளவு மின் தடைகள், மின்மாற்றிகள் பழுது மற்றும் புகார்கள் கொண்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் தமது பணிகளில் தனிக்கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகள் ஆகியவற்றில் உரிய முறையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தனிக்கவனம் செலுத்தி மின்நுகர்வோரிடமிருந்து வரும் புகார்களை குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, 30 நிமிடங்களுக்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்தும் அதற்கான காரணத்தை அந்தந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொது மக்களிடமிருந்து சமூக வலைதளங்கள் வாயிலாக பெறப்படும் புகார்கள் குறித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

மின் சேவைகள் மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 9498794987 என்ற எண்ணில் பொது மக்கள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் டி.என்.வெங்கடேஷ் ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி வார்டு எண் 18 ராமநாதபுரம் பகுதியில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா, கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) சதீஸ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி உள்பட பலர் உள்ளனர்.

# மக்களே பதிலடி கொடுப்பார்கள்: தி.மு.க.வை அழிக்க நினைத்து கிளம்பியவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை உதயநிதி

தஞ்சாவூர், நவ.9

தஞ்சையில் இன்று பூதலூர் வடக்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் கல்லணை செல்லக்கண்ணு இல்ல திருமண விழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்.

நான்துணைமுதலமைச்சராக வரவேண்டும் என்ற முதல் குரல் தஞ்சை மாவட்டத்தில் இருந்து தான் வந்தது. அதன் பிறகு நான் துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டேன்.

நவம்பர் மாதம் பொதுவாக மழை பெய்யும் மாதம் என்பார்கள். இன்று நான் உங்கள் அன்பு மழையில் நனைந்து தஞ்சாவூருக்கு வந்துள்ளேன். கருணாநிதி தஞ்சாவூர் தொகுதியில் நின்று வென்றார். தஞ்சாவூர் மண்ணில் அவர் கால் படாத இடமே கிடையாது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கடி நான் டெல்டாக்காரன் என கூறி மகிழ்வார். அதே போல் நானும் டெல்டாகாரன் தான் என்ற பெருமையோடு இந்ததிருமணத்தை நடத்தி வைக்கிறேன்.

இந்திய ஒன்றியத்திலேயே தமிழ்நாட்டில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி தான் சிறப்பான ஆட்சி என பலரும் கூறுகிறார்கள். நிதி ஆயோக் புள்ளிவிவரமே கூறியுள்ளது. திராவிடம் மாடல் ஆட்சியை பின்பற்றி தான் பல மாநிலங்கள் ஆட்சி நடத்தி வருகிறது. மகளிர் வளர்ச்சியேமாநிலத்தின்வளர்ச்சி என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செயல்பட்டு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண், இலவச பஸ் பயணம் என ஏராளமான திட்டங்களை அமல்படுத்தி மகளிர் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார் . மாதந்தோறும் 1 கோடியே 16 லட்சம் மகளிர்களுக்கு ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது.

திராவிட மாடல் ஆட்சியின் தொடர் வெற்றிகள் சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. தி.மு.க.வை அளிக்க வேண்டும் என பல பேர் கிளம்பி வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மக்களே பதில் கூறுவார்கள்.

பல அணிகளாக சிதறி கிடக்கும் அ.தி.மு.க.வும், யாருமே சீண்டாத பாஜகவும் தி.மு.க கூட்டணியில் விரிசல் ஏற்படாதா ? என துண்டு போட்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதலமைச்சர் திட்டவட்டமாக பதில் கூறிவிட்டார். நமது கூட்டணி கட்சி தலைவர்களும் தி.மு.க கூட்டணியில் தான் தொடர்வோம் என உறுதி நிலையில் உள்ளனர்.

வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளை வெல்லவேண்டும் என முதலமைச்சர் கூறியுள்ளார். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். வரும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்து 2வது முறை முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்பார். 7வது முறையாக தி.மு.க. ஆட்சி அமையும்.

தஞ்சைமத்தியமாவட்ட தி.மு.க.வில் எந்த தீர்மானம் நிறைவேற்றினாலும் அது நிறைவேறும் . குறிப்பாக நான் இளைஞரணி செயலாளராக வேண்டும் என்று முதன் முதலில் தஞ்சை மத்திய மாவட்டத்தில் தான் தீர்மானம் நிறைவேற்றினார்கள். அது நிறைவேறியது. அதன் பின்னர் அமைச்சராக வேண்டும் என்றும், துணை முதலமைச்சராக வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுவும் நிறைவேறி உள்ளது.

அதேபோல் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றுங்கள். அது தீர்மானமாக மட்டும் இல்லாமல் அதற்காக கடுமையாக உழைத்து வெற்றி பெற பாடுபடுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# சென்னையில் ஆண்டுக்கு 27,000 நாய்களுக்கு கருத்தடை செய்ய மாநகராட்சி திட்டம்



சென்னை, நவ.9

சென்னை மாநகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களைக் கட்டுப்படுத்த மாநகராட்சி நிர்வாகம் சார்பில் கருத்தடை சிகிச்சை செய்வது, வெறிநாய்க்கடி தடுப்பூசி செலுத்துவது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது தினமும் சராசரியாக 65 நாய்களுக்கு கருத்தடை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் 19,640 நாய்கள் பிடிக்கப்பட்டு 14,885 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சமீபத்தில் நடத்தப்பட்ட நாய்கள் கணக்கெடுப்பில் சென்னை மாநகராட்சி பகுதியில் 1.8 லட்சம் தெருநாய்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சென்னைமாநகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் நாய்களைக் கட்டுப்படுத்த லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாப்பேட்டை, புளியந்தோப்பில் புதிய இனக் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

நாட்டில் முதல் முறையாக நாய்களுக்கென பிரத்யேக இனக்கட்டுப்பாட்டு மையம் சென்னை விலங்குகள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாப்பேட்டை, புளியந்தோப்பில் கட்டப்பட்டுள்ளன. சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இந்த மையங்களில் தினமும் தலா 30 நாய்களுக்கு என ஆண்டுக்கு 9,000 நாய்களுக்குகருத்தடைஅறுவை சிகிச்சை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் சென்னையில் நாய் கருத்தடை சிகிச்சை ஆண்டுக்கு 27,000ஆக அதிகரிக்கும். புதிதாக அமைக்கப்பட்ட கருத்தடை மையங்களில் 100 நாய்களைப் பராமரிக்கும் வகையில் 40 கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தகுதி சான்று பெற ஒரே நாளில் குவிந்த 50 சுற்றுலா வாகனங்கள் அதிகாரிகள் திணறல்



திருவள்ளூர், நவ.9

திருவள்ளூர் மற்றும் சுற்றுப்புற பகுதியில் உள்ள சுற்றுலா வாகனங்களுக்கு திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று, அனுமதி சான்று, சாலை வரி உள்ளிட்டவையை வழங்கப்படுகிறது. தற்போது ஏராளமான பக்தர்கள் சபரிமலை யாத்திரை செல்ல சுற்றுலா வாகனங்களை முன்பதிவு செய்து வருகின்றனர். இதனால் திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்களுக்கு தகுதி சான்றிதழ்பெறதொடர்ந்து சுற்றுலா வேன், பஸ்கள் கடந்த ஒரு மாதமாக திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வந்து சென்றன.

அப்போது விதிகளை மீறி அகலம், வண்ணம் உயரம் ஒலிபெருக்கி மின் விளக்கு பல்வேறு காரணங்களுக்காக மோட்டர் வாகன ஆய்வாளர் நிராகரித்ததாக தெரிகிறது. இந்நிலையில் திருவள்ளூர் மோட்டார் வாகன ஆய்வாளர் விடுப்பில் சென்றுள்ள நிலையில் நேற்று ஒரே நாளில் 50க்கும் மேற்பட்ட சுற்றுலா வாகனங்கள் தகுதி சான்றிதழ் பெறுவதற்காக வட்டார போக்குவரத்து அலுவலத்தில் குவிந்தன. இதனால் அதிகாரிகள் திணறினர். சாலையோரம் நீண்ட தூரத்திற்கு அந்த வாகனங்கள்நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் பொறுப்பு மோட்டார் வாகன ஆய்வாளர் அந்த வாகனங்களுக்கு தகுதிச் சான்று அளிக்காமல் திருப்பி அனுப்பியதாக தெரிகிறது.

# மருத்துவத்துறை சார்ந்த குற்றச்சாட்டு குறித்து விவாதிக்க தயார்: இபிஎஸ்க்கு மா.சுப்பிரமணியன் சவால்





சென்னை, நவ.9

மருத்துவத்துறை 41 மாதங்களாக சீரழிந்துள்ளதாகவும், டெங்கு காய்ச்சல் பரவி வரும் நிலையில் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டி இருந்தார்.

இந்நிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ மருத்துவத்துறை சார்பான எந்த குற்றச்சாட்டுக்கும் எதிர்க்கட்சி தலைவர் இபிஎஸ் உடன் நேரடியாக விவாதிக்கத்தயார்.

★ இபிஎஸ் மட்டுமல்ல எத்தனை பேர் வந்தாலும் அவர்களுடன் அமர்ந்து மருத்துவத்துறை தொடர்பாக விவாதிக்கத்தயார்.

★ நேரத்தையும் இடத்தையும் நீங்களே முடிவு செய்து சொல்லுங்கள். ★ டெங்கு கட்டுப்படுத்தப்பட்ட ஆண்டாக இந்த ஆண்டு உள்ளது என்று கூறினார்.

மருத்துவத்துறையில் உள்ள குறைபாடுகளை இபிஎஸ் சுட்டிக்காட்டிய நிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விவாதிக்க அழைப்பு விடுத்துள்ளார்.

# வக்கீலை கொன்று உடல் தீவைத்து எரிப்பு வாலிபர் வெறிச்செயல்



ஆரல்வாய்மொழி, நவ.9

குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அருகே பீமநகரி விதை ஆராய்ச்சி மையம் அருகே சந்தியான் குளம் உள்ளது. இந்த குளத்தின் கரையில் இன்று காலை வாலிபர் ஒருவர் எரிந்த நிலையில் பிணமாக கிடந்தார்.

இதை அந்த வழியாக சென்றவர்கள் பார்த்து ஆரல்வாய்மொழி போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் அன்பு பிரகாஷ் தலைமையிலான போலீசார் சம்பவத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினார்கள்.

அவரையாரோ கொன்று உடலை எரித்துள்ளனர். இறந்து கிடந்தவரின் உடல் அடையாளம் தெரியாத அளவுக்கு எரிந்த நிலையில் கிடந்ததால் அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்ற விவரம் முதலில் தெரியவில்லை. இதையடுத்து அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியிருந்த காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது திருப்பதிசாரம் கீழூர் பகுதியை சேர்ந்த இசக்கிமுத்து (வயது 21) என்பவர் ஒருவரை அழைத்து செல்வது போன்ற காட்சி பதிவாகியிருந்தது. இதையடுத்து போலீசார் இசக்கிமுத்துவை பிடித்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் பிணமாக கிடந்தவரை இசக்கிமுத்து கொன்றதும், கொலை செய்யப்பட்டு கிடந்தவர் தக்கலை குமாரபுரம் சரல்விளைபகுதியை சேர்ந்த வக்கீல் கிறிஸ்டோபர் சோபி(50) என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் பிணமாக கிடந்த கிறிஸ்டோபர் சோபியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

வக்கீல் கிறிஸ்டோபர் சோபியை கொலை செய்ததற்கான காரணம் என்ன என்பது குறித்து இசக்கிமுத்துவிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் கிறிஸ்டோபர் சோபி கொலைக்கான திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

வக்கீலான கிறிஸ்டோபர் சோபி, இசக்கிமுத்துவின் சொத்து தொடர்பான வழக்கை நடத்தி வருகிறார். அந்த வழக்கை விரைந்து முடிக்காமல் இருந்ததாக தெரிகிறது. இதனால் இசக்கிமுத்து தனது சொத்து பத்திரங்களை தன்னிடம் தருமாறு கிறிஸ்டோபர் சோபியிடம் கூறியுள்ளார்.

ஆனால் பத்திரங்களை கொடுக்க அவர் மறுத்ததாக தெரிகிறது. இதனால் வக்கீல் கிறிஸ்டோபர் சோபியை தீர்த்துக்கட்ட இசக்கிமுத்து முடிவு செய்துள்ளார் . இந்த நிலையில் நேற்று கிறிஸ்டோபர் சோபி தனக்கு வாழைக் கன்றுகள்வேண்டுமென்று இசக்கிமுத்துவிடம் கேட்டுள்ளார்.

இந்தவாய்ப்பை பயன்படுத்தி கிறிஸ்டோபர் சோபியை தீர்த்துக்கட்ட இசக்கிமுத்து திட்டமிட்டுள்ளார். தங்களது ஊரில் வாழைக்கன்றுகள் இருப்பதாகவும், அங்கு வருமாறும் கிறிஸ்டோபர் சோபியிடம் கூறியுள்ளார். அதனை நம்பி அவர் நேற்று இரவு தனது மோட்டார் சைக்கிளில் இசக்கிமுத்து வீட்டிற்கு வந்துள்ளார்.

சந்தியான் குளக்கரை பகுதியில் உள்ள தோட்டத்தில் வாழைக்கன்று இருப்பதாக கூறி அங்கு கிறிஸ்டோபர் சோபியை தனது மோட்டார் சைக்கிளில் இசக்கிமுத்து அழைத்து சென்றார். அங்கு வைத்து கிறிஸ்டோபர் சோபியை தன்னிடம் இருந்த அரிவாளால் இசக்கிமுத்து அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளார்.

இதில் அவர் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில்இறந்தார். கொலை செய்யப்பட்ட கிறிஸ்டோபர் சோபியை அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக உடலை எரித்துவிட முடிவு செய்தார். அதற்காக தனது மோட்டார் சைக்கிளில் இருந்தே பெட்ரோலை எடுத்து, கிறிஸ்டோபர் சோபி உடலில் ஊற்றி தீ வைத்து எரித்துள்ளார்.

பின்பு அங்கிருந்து இசக்கிமுத்து அங்கிருந்து சென்று விட்டார். ஆனால் போலீசார் சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்ததால் இசக்கிமுத்து சிக்கினார்.

கைது செய்யப்பட்ட இசக்கிமுத்துமிடம் போலீசார்தொடர்ந்துவிசாரணை நடத்தி வருகிறார்கள்.

வக்கீல் வெட்டிக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவத்தால் ஆரல்வாய்மொழி மற்றும் தக்கலையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ரெயில்வே சுரங்கப்பாதையில் தேங்கிய மழை வெள்ளம்



பொன்னேரி, நவ.9

பொன்னேரி சுற்றுவட்டார பகுதியில் நேற்று மதியம் முதல் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இன்று காலையும் கனமழை நீடித்தது. இதனால் தெருக்களில் மழைநீர்குளம்போல் தேங்கியது. பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்வோர், வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்தனர்.

பொன்னேரிதிருவொற்றியூர் சாலையில் பாதாள சாக்கடை திட்டப் பணிக்காக தோண்டப்பட்ட பள்ளங்கள் சரியாக மூடப்படாததால் மழைநீர் தேங்கி நிற்கிறது. இதில் வாகன ஓட்டிகள் தடுமாறி சென்றனர். முத்து மாரியம்மன் கோவில் அருகில் சாலையில் குண்டும் குழியுமான பெரிய பள்ளங்களில் வாகன ஓட்டிகள் விழுந்து எழுந்து சென்றனர். இதே போல் பொன்னேரி அடுத்த கும்முணிமங்கலம் சாலையில் திடீரென பெரிய பள்ளம் ஏற்பட்டது. பொன்னேரி அடுத்த திருவாயர்பாடியில் உள்ள ரெயில்வே சுரங்கப் பாதையில் மழைநீர்குளம்போல் தேங்கிநின்றது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் தண்ணீர்குறையவில்லை. இதனால் அவ்வழியே சென்றவர்கள் தங்களது இருசக்கரவாகனத்தைதள்ளியபடி சென்றனர். ஏராளமான வாகனங்கள் மழை வெள்ளத்தில் சிக்கியது. இன்று காலை 108 ஆம்புலன்சு ஒன்று நீண்ட நேரம் மழை வெள்ளத்தில் தத்தளித்து மெதுவாக சென்றது.

இந்த சுரங்கப்பாதையானது மெதூர், பழவேற்காடு, சின்ன காவனம், பெரிய காவனம், திருப்பாலைவனம் என 100க்கும் மேற்பட்ட கிராமங்களை இணைக்கக்கூடிய பிரதான சாலை என்பதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்தனர். பொன்னேரி நகர மன்ற தலைவர் டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் மற்றும் நகராட்சி ஊழியர்கள் 2 ராட்சத மோட்டார்கள் மூலம் ரெயில்வே சுரங்கப்பாதையில் தேங்கி உள்ள மழை நீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

# ஆரணி ஆற்றங்கரையை பலப்படுத்த கால்வாயில் மணல் அள்ள எதிர்ப்பு



பொன்னேரி, நவ.9

பொன்னேரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மழைவெள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கையாக ஆரணி ஆற்றங்கரையை பலப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காகபொன்னேரி அடுத்த கூடுவாஞ்சேரி கால்வாயில் மண் எடுத்து ஆரணி ஆற்றங்கரையை பலப்படுத்தும் பணிகளை நீர்வளத் துறை அதிகாரிகள்தொடங்கினர். இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

கிராமமக்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோர் கால்வாயில் மணல் அள்ள எதிர்ப்பு தெரிவித்து அங்கிருந்த அதிகாரிகளை முற்றுகையிட்டு கடும் வாக்குவாதம் செய்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து கிராமமக்கள் கூறும்போது, கால்வாயில் மண் எடுப்பதால் ஆழம் அதிகரித்து உயிர் பலி ஏற்படும். மேலும் கால்வாயின்கரையை பலப்படுத்த வேண்டும் என்றனர். அவர்களிடம் பொன்னேரி வட்டாட்சியர் மதிவாணன் மற்றும் நீர்வளத்துறை உதவி பொறியாளர் செந்தில்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி கலைந்து போகச் செய்தனர். பொன்னேரி இன்ஸ்பெக்டர் குணசேகரன் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# நாம் தமிழர் கட்சியில் இருந்து மேலும் ஒரு நிர்வாகி விலகல்



சென்னை, நவ.9

நாம் தமிழர் கட்சியில் இருந்து சில பொறுப்பாளர்கள் தொடர்ந்து விலகி வருகின்றனர்.

கடந்த மாதம் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பாளர் பிரபாகரன் தலைமையில் நிர்வாகிகள் கட்சியில் இருந்து விலகினர். மேலும் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பில் இருந்து சுகுமார் விலகினார். அவர்கள் சீமான் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களைசாட்டினர்.

இதையடுத்து நாம் தமிழர்கட்சியின் விழுப்புரம் மேற்கு மாவட்ட செயலாளர் பூபாலன் அக்கட்சியில் இருந்து விலகினார்.

சீமான் தன்னிடம் பேசியது வருத்தத்தை ஏற்படுத்தியதாக அவர் கூறியிருந்தார்

இதைத்தொடர்ந்து நாம் தமிழர் கட்சியில் இருந்து விழுப்புரம் மத்திய மாவட்ட செயலாளர் மணிகண்டன் விலகினார்.

இந்நிலையில் தற்போது நாம் தமிழர் கட்சியின் மருத்துவ பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் பதவியில் இருந்து இளவஞ்சி விலகியுள்ளார்.

கட்சி தலைமையின் செயல்பாடுகள் பிடிக்கவில்லை, பெண்களுக்கு முக்கியத்துவம் இல்லை, புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை என்பதே இளவஞ்சியின் குற்றச்சாட்டாகும்.

# பொன்னேரி அருகே நாய்கள் தொல்லையால் பொதுமக்கள் அச்சம்



பொன்னேரி, நவ.9

பொன்னேரி அடுத்த தடபெரும்பாக்கம் ஊராட்சியில் தெருநாய்கள் அதிகரித்து உள்ளது. தெருக்களில் கூட்டம் கூட்டமாக நாய்கள் சுற்றித் திரிவதால் நடந்து செல்லவே அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்து வருகிறார்கள்.

சிறுவர்களையும், மாணவமாணவிகளையும் நாய்கள் கடிக்க பாய்ந்து அச்சத்துடன் செல்லும் நிலை உள்ளது.

மேலம் வாகனங்களில் செல்லும்போது திடீரென நாய்கள் குறுக்கே வருவதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. எனவே நாய்களை கட்டுப்படுத்த ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# தி.மு.க. கூட்டணி வலுவாக உள்ளது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



தஞ்சாவூர், நவ.9

தஞ்சையில் இன்று பூதலூர் வடக்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் கல்லணை செல்லக் கண்ணு இல்ல திருமண விழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி தான் சிறப்பான ஆட்சி எனபலரும்கூறுகிறார்கள். நிதி ஆயோக் புள்ளி விவரமே கூறியுள்ளது. திராவிடம் மாடல் ஆட்சியை பின்பற்றி தான் பல மாநிலங்கள் ஆட்சி நடத்தி வருகிறது. மகளிர் வளர்ச்சியே மாநிலத்தின் வளர்ச்சி என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செயல்பட்டு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண், இலவச பஸ் பயணம் என ஏராளமான திட்டங்களை அமல்படுத்தி மகளிர் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார் . மாதந்தோறும் 1 கோடியே 16 லட்சம் மகளிர்களுக்கு ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது.

திராவிட மாடல் ஆட்சியின் தொடர் வெற்றிகள் சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. தி.மு.க.வை அழிக்க வேண்டும் என பல பேர் கிளம்பி வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மக்களே பதில் கூறுவார்கள்.

பல அணிகளாக சிதறி கிடக்கும் அ.தி.மு.க.வும், யாருமே சீண்டாத பாஜகவும் தி.மு.க கூட்டணியில் விரிசல் ஏற்படாதா? என துண்டு போட்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதலமைச்சர் திட்டவட்டமாக பதில் கூறிவிட்டார். நமது கூட்டணி கட்சி தலைவர்களும்தி.மு.க.கூட்டணியில் தான் தொடர்வோம் என உறுதி நிலையில் உள்ளனர். வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளை வெல்ல வேண்டும் என முதலமைச்சர் கூறியுள்ளார். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். வரும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்து 2வது முறை முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்பார். 7வது முறையாக தி.மு.க. ஆட்சி அமைக்க அனைவரும் உறுதி ஏற்போம்.

தஞ்சைமத்தியமாவட்ட தி.மு.க.வில் எந்த தீர்மானம் நிறைவேற்றினாலும் அது நிறைவேறும். குறிப்பாக நான் இளைஞரணி செயலாளராக வேண்டும் என்று முதன் முதலில் தஞ்சை மத்திய மாவட்டத்தில் தான் தீர்மானம் நிறைவேற்றினார்கள். அது நிறைவேறியது. அதன் பின்னர் அமைச்சராக வேண்டும் என்றும், துணை முதலமைச்சராக வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுவும் நிறைவேறி உள்ளது.

அதேபோல் 2026 சட்டமன்றத்தேர்தலில்தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றுங்கள். அது தீர்மானமாக மட்டும் இல்லாமல் அதற்காக கடுமையாக உழைத்து வெற்றி பெறபாடுபடுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# சாதிவாரி கணக்கெடுப்பு: தெலுங்கானா காங்கிரசிடம் தி.மு.க. பாடம் கற்க வேண்டும் ராமதாஸ் தாக்கு

திண்டிவனம், நவ.9

திண்டிவனம் அருகே உள்ள தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர். ராமதாஸ் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தெலுங்கானாவில் சாதி வாரி கணக்கெடுப்பு நேற்று முதல் தொடங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆந்திரா, பீகார், ஒடிசா மாநிலங்களில் நடத்தப்பட்டுள்ளது. ஜார்கண்ட், மகாராஷ்டிராவில் நடத்தப்பட உள்ளது. இந்த விவகாரத்தில் தமிழக அரசு நடத்தும் நாடகம் அம்பலமாகி தி.மு.க. சொல்லும் சமூகநீதி என்ற முகமூடி கிழிந்துள்ளது. பொய்கள் மூலம் அரசு மக்களை ஏமாற்ற முடியாது. தெலுங்காவின் சாதிவாரி கணக்கெடுப்பு இம்மாதத்தின் இறுதியில் முடிகிறது. இப்பணிக்கு ரூ 150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு ரூ.250 கோடியில் 2 மாதத்தில் நடத்திமுடிக்கலாம். தெலுங்கானா காங்கிரஸ் அரசிடம் தி.மு.க. பாடம் கற்க வேண்டும். ஸ்டாலினின் முகமூடியை ராகுல் காந்தியும், ரேவன் ரெட்டியும் கழட்டியுள்ளனர். இதுவே தேசிய அளவில் நடத்தப்பட உள்ள கணக்கெடுப்புக்கு முன் மாதிரியாக இருக்கும் என்று தெலுங்கானா முதல்வர் கூறியுள்ளார். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மாநில அரசுக்கு அனுமதி இல்லை என்ற நாடகத்தை இனியாவதுமுதலமைச்சர் கைவிடவேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்களை நிரப்பவேண்டும். 40 சதவீத பணியிடங்கள் காலியாக உள்ளதை மாற்றப்பட வேண்டும். மருத்துவத்துறைக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கப்படுகிறது. இதுவே பணியிடங்களை நிரப்பாததற்கு காரணம். ரூ. 40 ஆயிரம் கோடியை வரும் ஆண்டில் நிதி ஒதுக்கவேண்டும்.

கூல் லிப் என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் புகையிலை தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் டெல்லி உள்ளிட்ட வட மாநிலங்களிலிருந்து கர்நாடகா வழியாக தமிழகத்திற்கு கடத்தி வரப்படுகிறது.நீதிமன்றம் இந்த புகையிலைக்கு மத்திய அரசு தடை செய்ய வேண்டும் என கூறியுள்ளது. எனவே மத்திய அரசு இப்புகையிலையை தடை செய்ய வேண்டும். தமிழகத்தில் 2500 அரசு பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது. இதனால் கற்றல் பணி பாதிக்கப்படுகிறது. காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற நூற்பாவிற்கும், அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த நன்னூல் சூத்திரம் முழுமையாக யாருக்கும் புரியாததால் அதை முழுமையாக பதிவிட்டேன். இந்த நன்னூல் நூற்பாவின் விளக்கம் என்னவெனில் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது தவறில்லை. உதாரணமாக மரத்தில் கொழுந்தாக உள்ள இலை பின் பழுத்து விழுந்தால் அது தவறில்லை.

சாதிவாரி கணக்கெடுப்பு எடுத்தால் என்ன ஆகும் என்று தெரியவில்லை. ஏன் பயப்படுகிறார் என தெரியவில்லை. கோட்டைக்கு போகாத நான் கோட்டைக்கு சென்று இக்கணக்கெடுப்பு நடத்த வலியுறுத்தினேன். இக்கணக்கெடுப்பு நடத்தினால் ஸ்டாலினை பாராட்டுவேன். நாகரீகமாகவும், நளினமாகவும் எங்கள் செயல்பாடுகள் உள்ளது. காவல்துறையில் கருணாநிதிகூறியதுபோல ஈரல் மட்டுமல்ல இதயம் உள்ளிட்ட அனைத்து உறுப்புகளும் செயலிழந்துவிட்டது. பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக சென்ற மாவட்ட செயலாளர் செல்வ மகேஷ் உள்ளிட்டோர்மீது வன்கொடுமை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் ஏமாளிகள். பொறுத்து பொறுத்து பார்க்கிறோம்.

சிறைக்கு செல்வது எங்களுக்கு புதிது அல்ல. அமைதியை குலைக்க நாங்கள் விரும்பவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட அம்பேத்கர் சிலையை நான் திறந்து வைத்தேன். அச்சிலையை சேதப்படுத்தினால் பா.ம.க., வன்னியர் சங்கம்தான் குரல் கொடுக்கும். கடலூர் காவல்துறைக்கு கற்பனை அதிகம். ஒரு சார்பு இல்லாமல் விருப்பு, வெறுப்பு இல்லாமல் நடந்து கொள்ளுங்கள். என்ன நடவடிக்கை எடுத்தாலும் எங்களை அடக்க முடியாது. நாங்கள் நியாயத்திற்கு கட்டுப்பட்டவர்கள். கருணாநிதி தமிழ்நாடு அமைதி பூங்காவாக இருக்க வேண்டும் என்பார். அதையே நானும் சொல்கிறேன்.

சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளதால் அப்போது பொதுக்குழு கூடி கூட்டணி குறித்து முடிவெடுக்கப்படும். கட்சி நிர்வாகிகளுக்கு வேண்டுமானால் இந்நூற்பா பொருந்தலாம். பிராமிணர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் முதலில் நான் தான் அவர்களுக்கு ஆதரவாக நிற்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது வன்னியர் சங்கத்தலைவர் பு.தா. அருள்மொழி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கொலையாளிகளின் சொத்துக்களை முடக்க நடவடிக்கை



சென்னை, நவ.9

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை மாதம் 5ந்தேதி பெரம்பூரில் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக கடந்தாண்டு கொலை செய்யப்பட்ட ஆற்காடு சுரேஷின் சகோதரர் பாலு உள்பட 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

பொன்னை பாலுவுடன் சேர்ந்து ஆற்காடு சுரேஷ் கொலைக்கு பழிவாங்குவதற்கும், தனது மகனான காங்கிரஸ் பிரமுகர் அஸ்வத்தாமனுடன் ஏற்பட்ட மோதலுக்கு முடிவு கட்டும் வகையிலும் வேலூர் சிறையில் இருந்து வட சென்னை தாதா நாகேந்திரன் இந்த கொலையில் உதவிகள் செய்தது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து அவரையும் போலீசார் கைது செய்தனர். பாஜக கட்சியில் சேர்ந்து பணியாற்றி வந்த பெண் தாதா அஞ்சலையும் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ளார். இந்த வழக்கில் போலீசார் குற்றபத்திரிகையையும் தாக்கல் செய்துள்ளனர். கொலை வழக்கை விரைந்து முடித்து குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வாங்கிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் அவரை தீர்த்து கட்டுவதற்காக கொலையாளிகள் எடுத்துச் சென்ற வெடி குண்டுகள் பலரது கைமாறி கொலையாளிகளின் கைக்கு சென்றிருப்பது தெரிய வந்து உள்ளது.

ஆம்ஸ்ட்ராங்கை வெட்டி கொல்வதற்கு முடிவு செய்த பொன்னை பாலுவும் அவரது கூட்டாளிகளும் தேவைப்பட்டால் வெடி குண்டுகளை பயன்படுத்த வேண்டும் என்று கையில் எடுத்துச் சென்றுள்ளனர்.

ஆனால் அதனை பயன்படுத்துவதற்கான தேவை எழவில்லை. அரிவாளாலேயே ஆம்ஸ்ட்ராங்கை அவர்கள் வெட்டிக் கொன்று விட்டனர்.

இந்த நிலையில் தான் ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பயன்படுத்த திட்டமிட்டிருந்த இரண்டு வெடிகுண்டுகளை போலீசார் கைப்பற்றி கொலை வழக்கில் சிக்கிய ஆதாரங்களாக சேர்த்து உள்ளனர். அந்த வெடிகுண்டுகள் சம்பவ செந்தில் மூலமாக தயார் செய்யப்பட்டு பொன்னை பாலுவிடம் வழங்கப்பட்டு இருப்பதும் தெரிய வந்துள்ளது.

கோடம்பாக்கத்தில் இருந்து 2 வெடிகுண்டுகளை எடுத்துக் கொண்டு அதனைசாப்பாட்டு பாத்திரத்தில் வைத்து மாநகராட்சி ஊழியர்கள் போல உடை அணிந்த 2 பேர் மோட்டார் சைக்கிளில் சென்று உள்ளனர். அவர்களை ஆம்ஸ்ட்ராங் கொலையாளிகள் முதலில் திருவல்லிக்கேணியில் உள்ள ஓமந்தூரார் அரசு ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லி உள்ளனர். அங்கு வைத்து வெடிகுண்டுகளை வாங்கிக் கொண்டு 2 பேர்ஐகோர்ட்டு அருகில் சென்று இந்த 2 வெடிகுண்டுகளையும் கைமாற்றி உள்ளனர்.

இந்த வெடிகுண்டுகளை மணலியில் ஒரு இடத்தில் பதுக்கி வைத்து விட்டு ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்வதற்காக கையில் எடுத்துச் சென்றுள்ளனர். இதற்கிடையே புதிதாக அமல்படுத்தப்பட்டுள்ள 'பி.என்.எஸ்.107' சட்ட பிரிவின் கீழ் கொலையாளிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் காவல்துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. அமலாக்கத் துறைக்கு மட்டுமே இருந்து வந்த இந்த அதிகாரம் புதிய சட்டப்பிரிவின் கீழ் போலீசாருக்கும் வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி சென்னை மாநகரபோலீசார்கொலையாளிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளிலும் இறங்கி உள்ளனர்.

இதுபோன்ற கொலை வழக்குகளில் கொலையாளிகள் ரூ.5 லட்சம் வரை கூலியாக பெற்றிருந்தால் அவர்களது ரூ.10 லட்சம் மதிப்பிலான சொத்துக்களைபறிமுதல் செய்வதற்கும் புதிய சட்டம் வழிவகுக்கிறது.

இதன்படி சென்னை மாநகர காவல் துறையினர் முதல் நடவடிக்கையாக ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கொலையாளிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தனியார் பால் விலை உயர்கிறது பால் முகவர்கள் சங்கம் எதிர்ப்பு



சென்னை, நவ.9

தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர் நலச் சங்க தலைவர் பொன்னுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் பால் கொள்முதலில் எந்த ஒரு விலை உயர்வோ, பால் உற்பத்தியில் பாதிப்போ,தட்டுப்பாடோ இல்லாத சூழலில் தமிழகத்தின் முன்னணி தனியார் பால் நிறுவனமான ஆரோக்யா, பால், தயிர் விற்பனை விலையை நாளை (சனிக்கிழமை) காலை முதல் லிட்டருக்கு 2 ரூபாய் உயர்த்துவதாக அந்நிறுவனம் பால் முகவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெரிவித்து உள்ளது.

அதன்படி நிறை கொழுப்பு பால் 500 மி.லி. பாக்கெட் ரூ.36ல் இருந்து 37 ஆகவும், 1 லிட்டர் பாக்கெட் ரூ.65ல் இருந்து 67 ஆகவும், நிலைப்படுத்தப்பட்ட பால் 500 மி.லி. பாக்கெட் ரூ.31ல் இருந்து 32 ஆகவும், 1 லிட்டர் பாக்கெட் ரூ.58ல் இருந்து 60 ஆகவும், 400 கிராம் தயிர் பாக்கெட் ரூ.30ல் இருந்து 32 ஆகவும், 500 கிராம் தயிர் ரூ.37ல் இருந்து 38 ஆகவும், 1 கிலோதயிர் ரூ.66ல் இருந்து 68 ஆகவும் உயர்த்துவதாகவும் தெரிவித்துள்ளது.

இது பொதுமக்கள்தலையில் பெரும்பாரத்தை சுமத்தும் செயலாகும் என்பதோடு, இந்த பால், தயிர் விற்பனை விலை உயர்வானது மற்ற தனியார் பால் நிறுவனங்களையும் விற்பனை விலையை உயர்த்த தூண்டுவது போல் ஆரோக்யா நிறுவனத்தின் செயல்பாடுகள் அமைந்து உள்ளது கண்டிக்கத்தக்கதாகும். கடந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் பால், தயிர் விற்பனை விலையை சொற்ப அளவில் மட்டும் குறைந்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஓராண்டில் பால் கொள்முதல் விலை, மூலப்பொருட்கள், வாகன எரிபொருள் உள்ளிட்டவற்றின் விலைகளில் மட்டுமல்ல பால் முகவர்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்திட பால், தயிர் விற்பனைக்கான கமிஷன் தொகையிலும் எந்த ஒரு மாற்றமும் இல்லாத சூழலில் ஆரோக்யாநிறுவனம் பால் மற்றும் தயிர் விற்பனைவிலையை உயர்த்துவது என்பது ஏற்புடையதல்ல என்பதால் இந்த விற்பனைவிலைஉயர்வை ஆரோக்யா நிறுவனம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

# அ.தி.மு.க. வழக்குகளின் விசாரணையில் இருந்து நீதிபதி திடீர் விலகல்





சென்னை, நவ.9

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டதை எதிர்த்தும், பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்தும் ஓ.பன்னீர் செல்வம், மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், ஜே.சி.டி.பிரபாகர் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் உரிமையியல் வழக்குகள் 2022ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டன.

அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான இந்த வழக்குகள் ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஜெயசந்திரன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தன.

அப்போது நீதிபதி, "அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்து கடந்த 2022ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்துள்ளேன். அதனால், இந்த வழக்குகளின் விசாரணையில் இருந்து விலகுறேன்.

இந்த வழக்குகளை வேறு நீதிபதி முன்பு பட்டியலிட தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கிறேன்" என்று கூறினார்.

# சாதிவாரி கணக்கெடுப்பு: தெலுங்கானா காங்கிரசிடம் தி.மு.க. பாடம் கற்க வேண்டும் ராமதாஸ் தாக்கு



சென்னை, நவ.9

பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தஞ்சைக்கு சென்றுள்ளார். அங்கு

தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கல்லணை செல்லக் கண்ணு அவர்களின் மகளின் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.


திருமண விழாவில் கலந்து கொண்ட அவர் சிறிது நேரம் உரையாற்றினார். அதில் திமுகவை அழிப்பேன் என்று பலர் கிளம்பி உள்ளனர். அதற்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. அவர்களுக்கு தமிழக மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

திமுக தொண்டர்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் உள்ளனர். இது தான் நம் எதிரிகளுக்கு எரிச்சலை தருகிறது. தலைவர் முக ஸ்டாலின் தலைமையில் நாம் பெருகின்ற தொடர்வெற்றிதான் அவர்களுக்கு மிகப்பெரிய எரிச்சலை தருகிறது.

அதிமுக அணி தற்போது பல்வேறு அணியாக பிரிந்துள்ளது. இப்படி தனித்தனியாக நிற்கும் அதிமுகவும் யாருமே சீண்டாத பாஜவும், எப்படியாவது திமுக கூட்டணியில் விரிசல் விழாத என துண்டை விரித்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் முக ஸ்டாலின் தலைமையிலான திமுக கூட்டணி வலுவாக உள்ளது என்று நம் தலைவரும் கூட்டணி கட்சி தலைவர்களும் கூறியுள்ளனர்.

2026ல் கழகம் மீண்டும் வென்றது. கழக தலைவர் 2வது முறையாக முதலமைச்சர் ஆனார். திமுக 7வது முறையாக ஆட்சியை அமைக்கிறது என்ற வரலாற்றை உருவாக்குவோம் என கூறினார்.

# காவல் உதவி மையத்திற்குள் நாயை பூட்டி சென்ற போலீசார்



ஆலந்தூர், நவ.9

ஆதம்பாக்கம் தில்லை கங்கா நகர் சுரங்க பாதை அருகே காவல் உதவி மையம் செயல்பட்டு வருகிறது. இதன் அருகே சுற்றி திரியும் நாய் ஒன்று காவல் உதவி மையத்திற்குள் இருந்தது. இதனை கவனிக்காமல் போலீசார் அந்த உதவி மையத்தை பூட்டி சென்று விட்டனர். இதனால் பயந்து போன அந்த நாய் காலை வரை விடிய,

விடிய குரைத்தது. நாயின் சத்ததால் அவ்வழியே சென்ற பொதுமக்கள் வேடிக்கை பார்த்தபடி சென்றனர்.

# மாதந்தோறும் கட்சி நிர்வாகிகளை விஜய் சந்திக்க திட்டம்

சென்னை, நவ.9

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் தனது அரசியல் பயணத்தை தொடங்கினார். அவர் முதல் அரசியல்மாநாட்டைகடந்தமாதம்27ந்தேதிவிக்கரவாண்டி வி சாலையில் நடத்தினார்.


மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றதுடன் மாநாட்டு மேடையில் விஜய் தனது முதல் அரசியல் பேச்சை அதிரடியாக பேசி அரசியல் அரங்கை அதிர வைத்தார். கட்சி கொள்கை, திட்டங்கள் திராவிட அரசியல் இருமொழி கொள்கை மற்றும் பல்வேறு அரசியல் சார்ந்த விஷயங்களை அவரது பாணியில் விஜய் பேசியது தமிழகமே திரும்பி பார்க்கும் வகையில் அமைந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 3ந் தேதி (ஞாயிறு) அன்று சென்னை பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் நிர்வாகிகளை தனித்தனியாக அழைத்து பேசி அவர்களை உற்சாகப்படுத்தியதுடன் கட்சியின் அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி விரைவில் வெளியிடுவேன் என்றார். முதல் மாநாட்டை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு தந்து வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டினீர்கள். அடுத்த மாநாட்டை இன்னும் சிறப்பாக நடத்துவோம் என கூறி நிர்வாகி களை உற்சாகப்படுத்தினார். செயற்குழு கூட்டம் முடிவடைந்ததை தொடர்ந்து விஜய் தனது 69வது படத்தின் படப்பிடிப்பில் பங்கேற்று நடித்து வருகிறார். 2வது கட்டமாக நடந்து வரும் படத்தின் படப்பிடிப்பில் 15 நாட்கள் தொடர்ந்து விஜய் பங்கேற்ற பின்னர் மீண்டும் அரசியல் பணியில் சில நாட்கள் ஈடுபட இருக்கிறார். கட்சி வளர்ச்சி மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை பற்றி கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்களுடன் விஜய் மாதந்தோறும் ஆலோசனை நடத்த திட்டமிட்டுள்ளார். இதுபற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது. மேலும் கட்சியில் புதிதாக இணைவதற்கு ஏராளமானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இணைப்பு விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

தினகனி



# பத்ம விபூஷன் விருது சத்குருவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



சென்னை, நவ.9

சத்குருவிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்ரை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சத்குருவுக்கு வழங்கப்பட்ட பத்ம விபூஷன் விருதினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநலவழக்கு ஒன்று தொடரப்பட்டு இருந்தது. இந்தவழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், இது மக்களின் பொது நலன் கருதி தாக்கல் செய்யப்பட்ட மனு இல்லை, சத்குரு எனும் தனிநபரைக் குறி வைத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. இந்த தீர்ப்பினை ஈஷா அறக்கட்டளை வரவேற்கிறது. முன்னதாக இந்த வழக்கில் மத்திய அரசு சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், "கடந்த பல ஆண்டுகளாக சத்குரு செய்து வரும் அனைத்து நல்ல பணிகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் சத்குருவை பத்ம விபூஷன் விருதிற்கு பரிந்துரைக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய அனை த்து விதிமுறைகளும் முறையாக பின்பற்றப்பட்டு உள்ளதாகவும், சத்குருவுக்கு எதிராக எந்த எதிர்மறையான விஷயங்களும் இல்லை" என்றும் கூறினார். இந்த பொதுநல மனுவை தாக்கல் செய்த அமைப்பு, இதேபோன்று சில ஆண்டுகளுக்கு முன்பு ஈஷாவிற்கு எதிராக வேறொரு வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்து இருந்தது.

அந்த வழக்கை "உள் நோக்கத்துடன் தொடரப்பட்டு வழக்கு" எனக் கூறி அப்போது உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது என் ப து நினைவுக்கூறதக்கது.

ஈஷாவின் நற்பெயருக்கும், மக்கள் நலப் பணிகளுக்கும் இடையூறு மற்றும்களங்கம்ஏற்படுத்தும் நோக்கில் ஒரு குழுவாக சிலர் செயல்பட்டு, ஈஷா குறித்து அவதூறுகளை பரப்பியும், பொதுநல மனு என்ற பெயரில் வழக்குகளையும் பதிவு செய்து வருகின்றனர். அவ்வாறு அவதூறு குற்றச்சாட்டு களோடு உள்நோக்கத்துடன் ஈஷாவுக்கு எதிராக தொடரப்பட்ட பல வழக்குகளை, உண்மையின் பக்கம் நின்று தள்ளுபடி செய்து நியாயமான தீர்ப்புகளை நீதிமன்றங்கள் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு வேலை வாங்கி தருவதாக ரூ.2½ லட்சம் மோசடி செய்த அ.தி.மு.க. பிரமுகர்போலீசார் விசாரணை



ராஜபாளையம், நவ.9

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள வேப்பங்குளத்தை சேர்ந்தவர் ஜெயமாலா (வயது 48). இவர் கருத்து வேறுபாடு காரணமாக முதல் கணவரை பிரிந்து செல்வகுமார் என்பவரை 2வது திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் ஜெயமாலா ராஜபாளையம் தெற்கு போலீஸ் நிலையத்தில் புகார்மனு அளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

நான் கடந்த வாரம் கலங்காபுதூரில் உள்ள கோவிலுக்கு சாமி கும்பிட சென்றேன். பின்னர் அங்கிருந்து வீடு திரும்புவதற்காக பஸ் நிறுத்தத்தில் பஸ்சுக்காக காத்திருந்தேன்.

அப்போது கீழராஜகுலராமன் பகுதியை சேர்ந்த பொன்ஆனந்த் (வயது 50), அவரது மனைவி சாந்தி ஆகியோர் காரில் அங்கு வந்தனர். இருவரும் ஊருக்கு செல்ல அரசு பஸ் வர தாமதம் ஆகும். எனவே காரில் ஏறி கொள்ளுங்கள் வீட்டில் இறக்கி விடுகிறோம் என கூறினர்.

இதனை நம்பி நான் அவர்களுடன் சென்றேன். ஆனால் என்னை வீட்டில் இறக்கி விடாமல் அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்றனர். அங்கு பொன் ஆனந்த் ரூ.2½ லட்சம் கொடுத்தால் உனக்கு அரசு வேலை வாங்கி தருகிறேன் என ஆசைவார்த்தை கூறினார்.

மறுநாள் தென்காசி ரோட்டில் உள்ள தனியார் வங்கிக்கு என்னை அழைத்து சென்ற பொன் ஆனந்த் எனது தாலி உள்பட 6 பவுன் நகையை அவரது பெயரில் அடகு வைத்து ரூ.2 லட்சம் கடன் பெற்றார்.

மேலும் எனது ஏ.டி.எம். கார்டு மூலம் வங்கி கணக்கில் இருந்த ரூ.55 ஆயிரத்தைஎடுத்தார். பணத்தை வாங்கிய பின் ஒரு வாரம் ஆகியும் வேலை வாங்கி தரவில்லை. இதுகுறித்து கேட்டபோது, பொன்ஆனந்த், அவரது மனைவி சாந்தி ஆகியோர் மிரட்டல் விடுத்தனர். எனவே உரிய நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுத்தர வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த புகாரின்பேரில் இன்ஸ்பெக்டர் செல்வி விசாரணை நடத்தி வருகிறார். மாவட்ட குற்ற பிரிவிலும் இதுதொடர்பாக புகார் செய்யப்பட்டுள்ளது.

பொன் ஆனந்த் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சின்னம்மா பேரவையில் மாநில ஒருங்கிணைப்பாளராக இருந்துள்ளார். பின்னர் அவர் அங்கிருந்து விலகி அ.தி.மு.க.வில் இணைந்ததாக கூறப்படுகிறது.

# மடத்துக்கு இடம் கொடுத்த பெண்ணை மணம்புரிந்த ஆதீனம் தன்னிலை விளக்கம்



குத்தாலம், நவ.9

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் அருகே தமிழகத்தில் உள்ள 18 சைவ ஆதீனங்களில் ஒன்றான சூரியனார்கோவில் ஆதீனம் அமைந்துள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு முதல் இந்த சூரியனார்கோவில் ஆதீனத்தின் 28வது குருமகா சன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (வயது 54) பொறுப்பு வகித்து வருகிறார். இந்நிலையில் இவர் பெங்களூருவை சேர்ந்த ஹேமாஸ்ரீ (47) என்ற பெண்ணை கடந்த மாதம் (அக்டோபர்) 10ந்தேதி பதிவு திருமணம் செய்து கொண்ட சம்பவம் வெளியாகி வைரலாகியது.

இதுகுறித்து சூரியனார்கோவில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தன்னிலை விளக்கம் அளித்து வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியதாவது:

நான் கர்நாடக மாநிலத்தில் மடம் தொடங்குவதற்கு ஹேமாஸ்ரீ என்ற பெண் இடம் கொடுத்தார். அந்த மடத்தை நிர்வாகம் செய்ய அவரை டிரஸ்டியாக நியமனம் செய்ய ஏதுவாக ஹேமாஸ்ரீயை பதிவு திருமணம் செய்து கொண்டேன். நான் எதையும் மறைக்கவில்லை.

இதற்கு முன்பு சூரியனார்கோவில் ஆதீனமாக இருந்தவர்கள் திருமணமாகிய பின்னரும் ஆதீனமாக செயல்பட்டு வந்துள்ளனர். சூரியனார்கோவில் ஆதீனத்தில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று எந்த விதிமுறையும் இல்லை. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் காவி வாங்கி ஆதீனகர்த்தராக பதவியில் இருக்கும் ஒருவர் இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடாது என ஆன்மீகவாதிகள் மத்தியில் கடும் சர்ச்சை எழுந்துள்ளது. மேலும், 54 வயதாகும் சூரியனார் கோவில் ஆதீனம் திடீரென திருமணம் செய்து கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நடிகை கஸ்தூரி மீது புதிய புகார் மேலும் 2 வழக்குகள் பாய்கிறது



சென்னை, நவ.9

பிராமணர்களுக்கும் தனி வன்கொடுமை தடுப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி இந்து மக்கள் கட்சி சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பேசிய நடிகை கஸ்தூரி தெலுங்கு பேசும் மக்களுக்கு எதிராக கருத்துக்களை கூறியதாக சர்ச்சை எழுந்துள்ளது.

இதைத் தொடர்ந்து கஸ்தூரி மீது தெலுங்கு அமைப்புகள் சார்பில் தமிழகத்தில் பல மாவட்டங்களிலும் புகார்கள் கூறப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சென்னை எழும்பூரில் தெலுங்கு அமைப்பு சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் போலீசார் 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கோயம்பேடு போலீசிலும் கஸ்தூரி மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் அகில பாரத இந்து மக்கள் அமைப்பு சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கஸ்தூரி மீது சென்னையில் மேலும் 2 வழக்குகள் பாய உள்ளன. இந்நிலையில் ரெட்டி நல சங்கத்தின் செயலாளர் செல்வராஜ், திருச்சி குற்றப் பிரிவு போலீசில் புகார் செய்தார். அதில் யூடியூப் சேனலில், வெளியான கஸ்தூரியின் கருத்துகள் மனதை புண் படுத்தும் வகையில் இருந்ததாக குறிப்பிட்டிருந்தார்.

இதன் பேரில் கஸ்தூரி மீது 196, 352, 353 ஆகிய 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்திந்திய போயர் பெண்கள் நலச்சங்கத்தின் தொழிற்சங்க நிர்வாகி விஜயலட்சுமி உப்பிலியபுரம் போலீஸ் நிலையத்தில் கஸ்தூரி மீது புகார் அளித்து உள்ளார்.

## 'கில்' நடிகருடன் இணைந்த அனன்யா பாண்டே



ஸ்டூடண்ட் ஆப் தி இயர் 2 படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமான அனன்யா பாண்டே, சமீபத்தில் தனது முதல் வெப் தொடரான 'கால் மீ பே'வில் நடித்திருந்தார். இதனைத்தொடர்ந்து, 'சி.டி.ஆர்.எல்' என்ற படத்தில் நடித்தார். சாப்ரான் மற்றும் அந்தோலன் பிலிம்ஸ் இணைந்து தயாரித்த இந்த திரில்லர் படத்தில் அனன்யா பாண்டே கண்டன்ட் கிரியேட்டராக நடித்திருந்தார்.

இந்நிலையில், அனன்யா பாண்டேவின் அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, கரண் ஜோஹர் தயாரிப்பில் உருவாக இருக்கும் 'சந்த் மேரா தில்' படத்தில், லக்சயா லால்வானி மற்றும் அனன்யா பாண்டே ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கவுள்ளதாக போஸ்டர் வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.

விவேக்சோனிஇயக்கும்இப்படம்அடுத்தஆண்டுதிரையரங்குகளில்வெளியாகும்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படம் தொடர்பான மற்ற விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. லக்சயா லால்வானி கடைசியாக ஆக்சன்திரில்லர் படமான 'கில்' படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாரா அலி கான் மற்றும் சித்தார்த் மல்ஹோத்ரா இணையும் முதல் படம்?




பிரபல பாலிவுட் நடிகர் சித்தார்த் மல்ஹோத்ரா. இவரது நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'யோதா'. இதில், ராசி கன்னா, திஷா பதானி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர்.

இதனையடுத்து, சித்தார்த் மல்ஹோத்ராவின் அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படத்திற்கு 'வ்வான்: போர்ஸ் ஆப் தி பாரெஸ்ட்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை தீபக் மிஸ்ரா இயக்கவுள்ளார்.

இதனை படக்குழு வீடியோ ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளது. அதனுடன் இப்படம் அடுத்த ஆண்டு வெளியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடிகர்கள் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும், இப்படத்தில் சித்தார்த்துடன் சாரா அலி கான் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது. நெட்பிக்ஸ் திரைப்படமான 'மர்டர் முபாரக்'கில் கடைசியாக நடித்திருந்த சாரா அலி கான் இப்படத்தில் நடித்தால், சித்தார்த் மல்ஹோத்ராவுடன் இணைந்து நடிக்கும் முதல் படமாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்தடுத்து இரண்டு ஹிட் படங்களை கொடுத்த நயன் சரிகா



தெலுங்கு திரைப்பட நடிகையான நயன் சரிகா, இதுவரை 3 படங்களில் நடித்துள்ளார். அதில், ஆனந்த் தேவரகொண்டா நடிப்பில்வெளியான"கம்கம்கணேஷா"இவரது முதல்படமாகும். காமெடி திரில்லர் கதைக்களத்தில் வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இதனையடுத்து, இளம் நடிகை நயன் சரிகா, 'அய்' படத்தில் நடித்திருந்தார். கடந்த சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியான இப்படம் மிகப்பெரிய அளவில் வரவேற்பை பெற்றது. இதில், பல்லவி கதாபாத்திரத்தில் நடித்த நயன் சரிகாவுக்கு பாராட்டுகள் குவிந்தன.

இப்படத்தையடுத்து, தனது 3வது படமாக 'கா' படத்தில் நடித்திருந்தார். இதில், சத்யபாமா என்ற கதாபாத்திரத்தில் கிராமத்துப் பெண்ணாக நடித்து பார்வையாளர்களைக் கவர்ந்தார். குறிப்பாக இளைஞர்களின் இதயங்களை வென்றுள்ளார். கடந்த தீபாவளியன்று வெளியான இப்படம் தொடர்ந்து வசூலை குவித்து வருகிறது. முதல் படம் தோல்வியடைந்தாலும், அடுத்தடுத்த இரண்டு ஹிட் படங்களை கொடுத்து கவனத்தை ஈர்த்துள்ளார் நயன் சரிகா. இவ்வாறு இரண்டு வெற்றிகளைப் பெற்றுள்ளதால், நயன் சரிகாவுக்கு அடுத்தடுத்து அதிக வாய்ப்புகள் கிடைப்பது உறுதியாகி உள்ளது.

## ரோகித் சர்மா இப்போதும் சிறந்த கேப்டன்தான் சூர்யகுமார் யாதவ் பாராட்டு



தென்ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 4 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடுகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி டர்பனில் உள்ள கிங்ஸ்மீட் ஸ்டேடியத்தில் இன்று நடைபெறுகிறது.

இந்த போட்டிக்கு முன்னதாக சூர்யகுமார் யாதவ் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அதில், நியூசிலாந்து தொடரில் தோல்வியை சந்தித்தாலும் ரோகித் சர்மா இப்போதும் சிறந்த கேப்டன் என்று பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "விளையாட்டில் வெற்றி தோல்விகள் நடந்து கொண்டிருக்கும் அனைவரும் வெற்றிக்காக கடினமாக உழைக்கிறார்கள். சில நேரங்களில் அது வேலை செய்யும் சில நேரங்களில் செய்யாது. ஆனால் அதையும் தாண்டி வாழ்வில் சமநிலையுடன் இருக்க வேண்டும் என்பதை நான் ரோகித் சர்மாவிடம் இருந்து மட்டுமே கற்றுள்ளேன்.

எந்த சூழ்நிலையிலும் தன்னுடைய கேரக்டரை மாற்றிக் கொள்ளாத அவரைப் போன்றவரை நான் பார்த்ததில்லை. நான் ஒரு வீரராகவும் கேப்டனாகவும் அவரைப் பார்த்து வளர்ந்தேன். ஒரு கேப்டன் தன்னுடைய அணி எப்படி விளையாட வேண்டும் என்பதை தீர்மானிக்கிறார். கேப்டன் எப்போதும் வெற்றி பெற விரும்புவார்.

ஆனால் தலைவர் தன்னுடைய அணியின் விளையாடும் ஸ்டைலை தீர்மானிப்பார். அந்த வகையில் ரோகித் சர்மாவிடம் இருந்து நான் நிறைய கற்றுள்ளேன். அவருடன் நான் ஐபிஎல் தொடரில் நிறைய விளையாடியுள்ளேன். அங்கே அவர் எப்படி அழுத்தத்தை கையாள்கிறார், உடல் மொழி, பவுலர்களை எப்படி வழி நடத்துகிறார் என்பது போன்றவற்றை நான் கவனித்துள்ளேன்.

நானும் அதையே செய்ய விரும்புகிறேன். களத்தில் இல்லாதபோது நான் வீரர்களுடன் நேரத்தை செலவிட்டு அவர்களுடன் பயணித்து சாப்பிடுவது போன்ற செயல்களை செய்து வருகிறேன். இது போன்ற சிறிய விஷயங்கள் கூட களத்தில் எதிரொலிக்கும்" என்று கூறினார்.

## நியூசிலாந்து தொடரை மறந்து விடுங்கள் இந்திய அணிக்கு முன்னாள் கேப்டன் ஆதரவு



இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிராக சொந்த மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் ஒயிட் வாஷ் ஆனது. இதனையடுத்து இந்திய அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் விளையாட உள்ளது. இதில் 4 போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற முடியும் என்ற நெருக்கடிக்கு மத்தியில் இந்தியா களமிறங்க உள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்திடம் சந்தித்த தோல்வியால் இந்திய அணியினர் அறைக்குள் அமர்ந்திருப்பதில் அர்த்தம் இல்லை என முன்னாள் கேப்டன் கபில் தேவ் கூறியுள்ளார். தற்போதைய நிலையில் இந்திய அணியினர் நியூசிலாந்து தோல்வியை முற்றிலும் மறந்து விட்டு அதிகமாக பயிற்சிகளை எடுக்க வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார். அப்படியே நம்பிக்கையுடன் ஆஸ்திரேலியாவுக்கு சென்றால் இப்போதும் நம்மால் வெல்ல முடியும் என்று அவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "மீண்டும் அடிப்படைக்குச் செல்லுங்கள். பயிற்சி, பயிற்சி, பயிற்சிகளை எடுங்கள். நான் அறையில் அமர்ந்து கொண்டு முன்னேறுவேன் என்று சொன்னால் அது நடக்கப் போவதில்லை. ஒருவேளை நீங்கள் மோசமான காலங்களில் இருந்தால் அதிகமாக எடுக்கும் பயிற்சிகள் உங்களை சிறந்தவராக மாற்றும். விராட் கோலி, ரோகித் சர்மா 15 வருடங்கள் விளையாடி தங்களை நிரூபித்தவர்கள். அவர்கள் சிறந்த வீரர்கள். சில நேரங்களில் இது அதிகமாக கவனம் செலுத்துவதை பற்றியதாகும்.

எனவே கடந்த தொடரை மறந்து விட்டு களத்திற்கு சென்று மகிழ்ச்சியுடன் விளையாடுங்கள் என்று அவர்களுக்கு நான் சொல்வேன். இந்தத் தொடரை நீங்கள் மறந்து விட்டு பார்த்தால் மற்றபடி இந்திய அணியினர் நன்றாகவே செயல்பட்டுள்ளார்கள். எனவே இந்திய அணிக்கு நான் வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். உங்களிடம் இருக்கும் பிரச்சினைகளை வேகமாக சரி செய்து கொள்வது முக்கியம். நாம் நம்முடைய பேட்ஸ்மேன்கள், ஸ்பின்னர்கள், பவுலர்கள் ஆகியோரால் பெருமை அடைகிறோம்.

பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடருக்காக அவர்களுக்குநான்நல்லவாழ்த்துகளைதெரிவிக்கிறேன். கடினமான காலங்கள் முடிந்து விட்டன. தற்போது நீங்கள் நேர்மறையான விஷயங்களில் கவனம் செலுத்துங்கள். அவர்கள் நன்றாக விளையாடுவார்கள் என்று நம்புகிறேன். இதுவே நான் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணிக்கு சொல்லும் செய்தியாகும்.நம்முடையஇந்தியஅணிக்குஎன்னுடைய சிறந்த வாழ்த்துகள்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.